உ

# வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய
# பிரணவக் களிற்றுப் பதிகம்
# மூலமும் உரையும்

**பிரணவக் களிற்றின் பெய்கழல்**
**சரணமே கருதித் தாழ்குதும்**
**கரணவா தனையும் கன்மமும்**
**மரணமும் பிறப்பும் ஆறவே**

*புலன்கள்வழிப் படும் துன்பங்களும் வினைகளும் பிறப்பும் இறப்புமான அனைத்தும் நீங்கிட பிரணவ வடிவான ஆனைமுகனின் திருத்தாளைச் சரண் புகுவோம்.*

*ஆறுதல் – அடங்குதல்.*

**உண்கண் வாட்படை யாலிளையோர் களையுறுக்கும்**
**பெண்கள் மாலதொடு பேதலியா தெனைப்பேணாய்**
**எண்கண் வேதியன் ஆதியமூ வருக்கிரங்கும்**
**கண்கள் மூன்றுடையாய் முதற்பிர ணவக்களிறே**

*அனைத்திற்கும் ஆதியான பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! எட்டுக் கண்கள் உடைய வேதியனான பிரமன் முதலான மும்மூர்த்தியரும் வழிபட அவர்களுக்கு இரங்கி அருள் செய்யும் திருவிழிகள் மூன்றுடையவனே! மைதீட்டிய வாள்போலும் கண்ணினால் இளைஞர்களை வருத்தும் பெண்டிர் மேல்கொண்ட மயக்கத்தால் புத்தி தடுமாறாதபடி அடியேனைக் காத்தருள்வாய். 1*

**பொற்றை போலுறும் தீவினைத் தொடர்பெலாம் போக்கி**
**எற்றை நாளும் நின்னாளெனத் திகழும் வாழ்விசையாய்**
**பற்றை வென்றவரிடு மிலைமதியொடும் பழகும்**
**கற்றைவார் சடையாய் எழிற் பிரணவக் களிறே!**

*பற்றை வென்ற சிவபெருமான் தரித்த இளமதியோடு விளையாடுபவனே! கற்றை வார் சடையை உடையவனே! அழகான, பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! அடர்ந்த*

*காடுபோன்ற தீவினை என்னைப் பற்றாதபடி போக்கி, எந்நாளும் நின் அடிமையாளாகத் திகழும் வாழ்வினை வரமாக இசைவாய்.*

*பொற்றை– மலை, காடு; மிலை – சூடுதல் 2*

**சோக வாரிதித் திரைகளில் படுந்துயர் தொலைந்து**
**தேகமொடு உனைக் கலந்திடத் திருவருள் செய்வாய்**
**பாகசாதனன் தவத்தினுக் இரங்கலால் பண்டு**
**காகமாகியும் வருமொரு பிரணவக் களிறே!**

*இந்திரனுடைய தவத்திற்கு இரங்கி முன்னொருநாள் காகமாகவும் வந்து தோன்றிய பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! வருத்தும் துன்பக் கடலின் அலைகளில் ஆட்பட்டு வருந்தும் துயர் நீங்கி உடலோடு உன்னைக் கலந்திடுமாறு திருவருள் புரிவாய்.*

*அகத்தியர் காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிய வேளையில் சீகாழியில் இந்திரன் பூசைக்காக ஏற்படுத்திய நந்தவனம் நீரின்றி வாடிற்று. நாரதர் கருத்தின்படி இந்திரன் விநாயகரை வேண்டினான். அவரும் இந்திரன் தவத்திற்கு இரங்கி விநாயகர் காக வடிவமெடுத்துக் கமண்டல நீரைக் கவிழ்த்தார் என்ற புராணச் செய்தி இங்குப் பேசப்படுகின்றது.*

*வாரிதி – கடல்; பாகசாதனன் – இந்திரன். 3*

**எந்தவேளையும் நின்றிருவுருவமே எண்ணி**
**இந்த லோகமும் மதித்திடத் திகழ்நலம் ஈவாய்**
**மந்த மாருத வரைமுனிக்கு உதவிய வரதா**
**கந்த மும்மதம் பொழிதரு பிரணவக்களிறே**

*தென்றல் தவழும் பொதியை மலை முனி அகத்தியருக்கு உதவிய வரதனே! மணமுடைய மும்மதங்களைப் பொழிகின்றவனாய்த் திகழும் பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! எப்போதும் உன்னுடைய திருவடிவமே எண்ணித் தொழுபவனாயும் இவ்வுலகத்தார் மதிக்கும்படியும் திகழ்கின்ற அருளை வழங்குக. 4*

**சென்னி ஐந்துடைச் சிவன்முதல் பரவும் நின் திருத்தாள்**
**உன்னி வாழ்பவர் உறவெனக்கு உதவும் நாளுளதோ**
**வன்னி கூவிளம் அறுகொடு முடிமிசை வனைவாய்**
**கன்னி வல்லவை மருவிய பிரணவக் களிறே**

*வன்னித்தழைகளுடன் வில்வம் அறுகம்புல் ஆகியனவற்றைச் சிரசில் தரிப்பவனே! வல்லவையை மணந்தருளிய பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! ஐந்து தலையையுடைய சிவபெருமான் முதலாக தேவரும் வணங்கும் உன் திருவடியை எண்ணி வாழும் பக்தர்களொடு என்னையும் உறவாக்கும் நாள் என்று வருமோ? அடியேனுக்கு அருள்வாய். 5*

**பூமனார் கரமெழுதிய விதியினால் புலர்வேன்**
**ஏமனேவிடவரும்பொலார்க்கஞ்சுறாது இரங்காய்**
**தாமநாபியந்தனிமுகிற்கிளையவள் தனையா**
**காமன் நாணுறத் தரும் புகழ்ப் பிரணவக்களிறே!**

*தாமரைக் கொப்பூழை உடைய மேகவண்ணனுக்கு இளையவளாம் உமையின் மகனே! மன்மதனும் வெட்கும் அழகு படைத்த பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! பிரமன் எழுதிய விதிக்கு அஞ்சி வருந்துகின்றேன்; எமன் ஏவிட வரும் தூதர்களுக்கு அஞ்சாதவகையில் என்பொருட்டு மனம் இரங்குவாய்.*

*பூமன் – பிரமன்; தாமம்– பூ, இங்கு தாமரை; நாபி – கொப்பூழ். 6*

**பொருது தானவப் பகையறத் தொலைத்த மெய்ப்புகழ்தோய்**
**விருது பாடும் என்வினை முழுது இரிதர விரட்டாய்**
**எருதுளான்றனைச் சூழ்ந்தொரு கனிகொளும் எந்தாய்**
**கருதுவார் உளத்தாடிடும் பிரணவக்களிறே**

*காளையை வாகனமாகக் கொண்ட சிவபெருமானை வலம்வந்து ஞானக் கனியைப் பெற்ற என் தந்தையே! நினைத்துத் தொழுவார் உள்ளத்தில் நடமிடும் பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! போரிடும் அரக்கராகிய பகைப்படையைத் தொலைத்த நின் மெய்ப்புகழைப் போற்றிப் பாடும் அடியேனுடைய வினை முழுமையும் நீங்கிடுமாறு போக்கியருள்க.*

*தானவர் – அரக்கர்; இரிதரல் –நீக்குதல். 7*

**பொருனையாறொடு பொன்னியும் உதவிய பொருவில்**
**பெருமை நாடியும் பிணக்கரோடு இணக்குறல் பெயர்த்து ஆள்**
**தருண வல்லவை கணவனே புகர்மலிதலையாய்**
**கருணை ஆழி இனமுது உறழ் பிரணவக்களிறே**

*கன்னி வல்லவையின் நாயகனே! புள்ளி பொலிந்த ஆனை முகனே; கருணைக் கடலில் தோன்றிய இனிய அமுதத்திற்கு நிகரானவனே! பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே!*

*தாமிரபரணியுடன் காவிரியையும் உதவிய ஒப்பற்ற பெருமையை உணர்ந்து அடைந்த பின்னும் தீயவருடன் சேரும் நிலை வராமல் அவர்களிடமிருந்து நீக்கி என்னை ஆண்டருள்வாய்.*

*விநாயகர் காகமாகி அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைத் தந்தமை முன் குறிக்கப்பட்டது. பொருநையாகிய தாமிரபரணியைத் தந்த வரலாறு விளங்கவில்லை.*

*தருணம் – இளமை; புகர் – புள்ளி; இனமுது– இன்னமுது. 8*

**ஏனலூடு முன்னிளையவன் வருந்தும் நாளிரங்கிப்**
**போன மெய்ப்புகழ் புவியெலாம் உரைத்திடல் பொய்யோ**
**ஞான வாரிதியே எனக்கோர் மொழி நவின்றாய்**
**கான வண்டுணும் கழிமதப் பிரணவக் களிறே**

*பண் இசைக்கும் வண்டுகள் பொருந்தி உண்ணும் மதநீர் பெருக்குடைய பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! ஞானக் கடலே! முன்னொருநாள் தினைப்புனத்தில் இளவலான முருகவேள் வள்ளியை அடைய முடியாது வருந்தும்வேளையில் ஒரு களிற்றின் வடிவாகச் சென்று அவர்களைச் சேர்த்தவன் நீ அல்லையோ; அந்த மெய்யான புகழை இந்தப் புவி மாந்தர் போற்றுதலும் பொய்யோ? நிட்டையிலிருந்தபோது எனக்கு அருள்மொழியைச் சொன்னதும் உண்டே! (அதனை மெய்யாக்கி அருள்க.)*

*ஏனல் – தினைப்புனம்; இளையவன் – தம்பி (முருகவேள்). 9*

**சயிலமே நிகர் ஆகுலிற்றமியனேன் தன்முன்**
**வெயின்மிகா இளம்பரிதியின் சந்ததம் விளங்காய்**
**பயிலு முத்தமிழ்ப் பாவையைப் பேருருட் பரிவால்**
**கயிலைமால்வரைமிசைவிடும் பிரணவக்களிறே**

*முத்தமிழ்ப் பாக்களைப் பாடும் ஔவையைப் பேரருளாம் அன்பினால் கயிலை மலையில் சென்று சேர்த்த பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனே! மலையை ஒத்த துன்பம் அடைந்த அடியேன் முன் வெயில் மிக்கு வருத்தாத இளங்கதிரவனை ஒத்த ஒளிவடிவுடன் எப்போதும் தோன்றியருள்க.*

*அடியேன் செய்யும் பிழைகளைக் கண்டு சினங்கொண்டு வருத்தாது அருளுக என்பது குறிப்பு.*

*சயிலம் – மலை; ஆகுலிற்ற தமியேன் என்பது ஆகுலிற்றமியேன் என வந்தது; ஆகுலித்தல் – வருந்துதல்; முத்தமிழ்ப் பாவை – ஔவை; 10*

**கரிய மாயன் முன்றொழுது எழும் பிரணவக்களிறாம்**
**பெரிய தாதையைத் திருப்புகழ்ப் பாவலன் பேசும்**
**அரிய பாடல்கள் ஒருபதும் கற்றுநன்கறிவார் அ**
**வர் யார் அவர் செனக்கலை முழுதுண் வரரே**

*கரிய மாயவனாகிய திருமால் தொழுது வணங்கும் பிரணவ சொரூபியாகிய ஆனைமுகனாகியவனும் அடியேற்குப் பெரிய தந்தையானவனும் ஆன விநாயகனைத் திருப்புகழ்ப் பாவலனாகிய அடியேன் பாடும் பாடல்கள் பத்தினையும் கற்று நன்கு உணர்ந்தவர் யாரோ அவர்கள் பிறவிக் கல்லை முழுதும் உண்டு தீர்க்க வரத்தைக் கொண்டவர் ஆவர்.*

*சென– ஜனித்தல் என்பதன் மரூஉ எனவும் கலை – கல்லை என்பதன் இடைக்குறை எனவும் கொண்டு உரைகொள்ளப்பட்டது. இவ்வடியின் பொருள் மேலும் ஆராயத்தக்கது. 11*

*முற்றிற்று*

*ஔவையார் சகாயம்*